# மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழு

## <u>மத்திய மாகாண சபை அரச சேவையின், மாகாண வருமான சேவையின் வகுப்பு 3 தரம் II இற்கு வரி உத்தியோகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018</u>

மத்திய மாகாண சபை அரச சேவையின், மாகாண வருமான சேவையின் வகுப்பு 3 தரம் II வரி உத்தியோகர்கள் பதவியில் நிகலும் 04 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2018-12-28 ஆம் திகதிக்கு பூர்த்தி செய்துள்ள மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவினைக் கொண்ட ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமைகள் :-

1.1. பொது தகைமைகள்:-

1.1.1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
1.1.2. சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
1.1.3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும்.
1.1.4. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
1.1.5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் 18 வயதுக்கு குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் .(அதாவது, 2000.12.28ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக பிறந்த மற்றும் 1983.12.28 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். ஏற்கனவே மத்திய மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று)

1.2. கல்வித் தகைமைகள் : -

1.2.1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக அல்லது சட்டத்தரணியான இருத்தல்

அல்லது

1.2.2. அரச பட்டய கணக்காளர் நிறுவனத்தின் உள்ளக இடைத்தர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அல்லது அரச உயர் தொழிநுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல், வர்த்தக விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் பற்றிய இடைத்தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல், அல்லது பட்டயக் கணக்காளர்களின் முகாமைத்துவ நிறுவனத்தின் (CIMA – ஐக்கிய இராச்சியம்) I, II மற்றும் III ஆகிய பகுதிகளில் சித்திபெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான யாதேனும் ஒரு பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

1.2.3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு மாகாண அரச சேவையில் பணிபுரியும் அத்திகதியன்று மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கும் பதவியில் 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள மாகாண அரச சேவையில் எழுதுநர் சேவை அல்லது அதற்கு சமமான சேவையில் (மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில்) உள்ள ஒருவராக இருத்தல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்** : -

அரச நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இன் MN-5-2016 இற்கமைய மத்திய மாகாண அரச சேவையில் வரி உத்தியோகர்கள் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் கீழ்வருமாறு

ரூபா. 34,605 – 10X660 – 11X755 – 15X930 – ரூபா. 63,460/-

(அரச நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இன் ஏற்புகளின் அடிப்படையில் சம்பளங்கள் வழங்கப்படும்)

3. சேவை நிபந்தனைகள் : -

3.1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும் தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

3.2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்போது அரச சேவையில் இல்லாதவிடத்து, மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு குறிப்பிட்ட பதவியில் நியமிக்கப்படுவர்

3.3. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தற்போது அரச/ மாகாண அரச சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடைய பதவியில் பணிபுரியும் அலுவலராயின், ஒரு வருட பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படுவர்

3.4. இப்பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்காக மத்திய மாகாண வருமான சேவை பிரமாணக் குறிப்பின் உப அட்டவணையின் பின்னிணைப்பு (அ) (2) இல் குறிப்பிட்டுள்ள தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டியதுடன் அதில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர் தகுதிகாண் காலத்தின் இறுதியில் தாபன விதிக்கோவையின் ஏற்புகளுக்கமைய அப்பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்.

3.5. இந்நியமனம் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

4. ஆட்சேர்ப்பு முறை: -

நிலவும் 100 சதவீதமான வெற்றிடங்களும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு பின்னர் அரச நிருவாக சுற்று நிரூபம் 15/90 இற்கமைய மத்திய மாகாண சபை அரச சேவையின், மாகாண வருமான சேவையின் வகுப்பு 3 தரம் II வரி உத்தியோகர்கள் பதவிக்கு தெரிவு செய்யப்படுவர்.

5. விண்ணப்பிக்கும் முறை:-

5.1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை (நீல நிறமான பற்றுச்சீட்டை) விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது.

5.2. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் “செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி” என்ற முகவரிக்கு 2018-12-28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் “வரி உத்தியோகர்கள் பதவிக்கு. ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை- 2018” அத்துடன் நிரந்தர வதிவு மாவட்டம் என்பவற்றைக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

6. பரீட்சை ஊடகம்

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான குறியீட்டினை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7. பரீட்சை நிலையம்

பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

8. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்

பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கீழ்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

9. பரீட்சை செயற்றிட்டம் : -

பொது அறிவு மற்றும் உளச்சார்பு தொடர்பான ஒரு வினாப் பத்திரமாகும்
(காலம் 01 ½ மணித்தியாலங்கள். 100 புள்ளிகள்)

இப்பரிட்சைத் தாள் 02 பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதிக்கு 50 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். முதல் பகுதி உளச்சார்பு பரீட்சைப் பத்திரமாகும். 45 நிமிடங்களுக்குள் இதற்கு விடையளித்து அதனைக் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்தியின் பொது அறிவினைப் பரீட்சிப்பதற்கான இரண்டாவது பகுதியினை எஞ்சியுள்ள 45 நிமிடங்களில் விடையளித்தல் வேண்டும். இப் பொது அறிவு மற்றும் உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைய 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

10. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணபத்திற்கமைய ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 01-04 வரையான விடயங்களையும், இரண்டாவது பக்கத்தில் 05-08 வரையான விடயங்களையும், மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அவசியமாகும். விண்ணபத்தை தட்டச்சு செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் பூரணப்படுத்தும் போது கீழ் குறிப்பிட்டுள்ள குறியீட்டு எண்களை பொருத்தமான கூடுகளில் இடவேண்டும். உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

10.1. விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் என குறிப்பிடவேண்டியது விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகும். மாவட்டங்களின் குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| கண்டி | - | 01 |
| மாத்தளை | - | 02 |
| நுவரெலியா | - | 03 |

10.2. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது ரூபா 240,360/- இற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

10.3. நியமனம் வழங்க முன், வழங்கிய பின், அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

10.4. தற்போது அரச/ மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டையில் அவர்களது கையொப்பத்தை திணைக்களத் தலைவரின் மூலம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் ஒருவரின் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

10.5. குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத்தவறிய பரீட்சார்த்தி பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

11. அனுமதி அட்டை வழங்குதல்

11.1. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி, காசு செலுத்திய பற்றுச்சீட்டினது பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டின் பிரதி என்பவற்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமாகும்.

11.2. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகள் மீறப்படுமிடத்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக வேண்டிவரும்.

11.3. பரீட்சைப் பெறுபேறுகள்

இவ்வறிவித்தலின் மேலே பந்தி 09 இல் குறிப்பிட்டுள்ளவாறு பொது அறிவு மற்றும் உளச்சார்பு பரீட்சையில் 40% இற்கு குறையாத புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் "செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு" இற்கு வழங்கப்படும். பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் அவர்களது சுய முகவரிக்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

12. இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், இவ்வறிவித்தலில் வெளியாகாத வேறு விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும்.

13. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இப்பரீட்சை நடைபெறும் திகதி தொடர்பில் அறிவிக்கப்படும்.

14. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

கை/இ: எல்.ஏ. சுஜாதா விஜேசிங்க
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2018 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.